ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2004/21 - 2017 ජනවාරි 30 වැනි සඳුදා - 2017.01.30
*2004/21 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு இரத்மலானை - மொரட்டுவை கழிவு நீர் மீள் சுழற்சி கருத்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் 6 ஆம் இலக்க நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழேஅட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக்கொள்ளும் கட்டளையினூ டாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்த,
பத்தரமுல்லை,
2017 சனவரி, 17.
5/2/2/1261.

**அட்டவணை**

கொழும்பு மாவட்டத்தில், மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 552ஏ, லுனாவ கிராம அலுவலர் பிரிவில், லுனாவ கிராமத்தில் அமைந்துள்ள காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து 10 பேர்சசுகள் விஸ்தீரணமுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :

வடக்கு : லுஷன் த சில்வா மாவத்தை ; கிழக்கு : இல. 85/6 உடைய வீட்டுக் காணி ; தெற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி ; மேற்கு : புரண் அப்பு ரஜ மாவத்தை.

காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் : கண்டறிய முடியாதுள்ளது.

02 - 594

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.